| Scale | Cm | Tempo | 90 | Style | Ballad>Lovesong |
|---|---|---|---|---|---|

48. அபிஷேகியும் தேவா

அபிஷேகியும் தேவா அபிஷேகியும்
சுவிசேஷம் அறிவிக்க அபிஷேகியும்
இதயம் நொறுங்குண்டோரை குணமாக்கிடவும்
சிறைப்பட்டு கட்டுண்டோரையே விடுவிக்கவும் (ஏசா 61:1)

1

சுவிசேஷம் அறிவிக்க வாக்கை தாரும் (எபே 6:20)
சுவிசேஷ ஒளியை பிரகாசிப்பியும் (2கொரி 4:4)
வசனத்தோடு தேவ வல்லமையோடு
பரிசுத்த ஆவியால் அபிஷேகியும் (1தெச 1:5)

2

யாரை நான் அனுப்புவேன் என்ற தேவன்
யார் நமது காரியமாய்ப் போவான் என்றீர்
இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும்
என்றென்னை அற்பணித்தேன் அபிஷேகியும் (ஏசா 6:8)

3

கோதுமை மணியோ நல் நிலத்தில் விழுந்து
சாகாவிட்டால் அது தனித்தே இருக்கும்
செத்ததேயாகில் மிக பலனைத் தரும்
கனி கொடுக்க எம்மை அபிஷேகியும் (யோவான் 12:24)